# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.39 (L.W.63)

| | | | |
|---|---|---|---|
| Name | வேதநாயகம் | Caste | இந்து |
| Father's Name | க.திருவேங்கடம் | Calling | |
| Village | சென்னை | Religion | |
| Taluk | சென்னை | Age | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.02.2025.

( A1 to A6 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 03.45 P.M.**

நான் கடந்த 31.05.2023 அன்று ஓமந்துரார் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் பேராசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். நான் கடந்த 27.06.2015 அன்று சென்னை மருத்துவக்கல்லூரியில் இணைப்பேராசிரியராக மேற்கண்ட துறையில் பணியில் இருந்தபோது பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 வழக்கின் தொடர்பாக நீதித்துறை நடுவர் நீதிமன்ற எண்.5 வேலூர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட வேண்டுகோள் கடித்ததின் பெயரில் மருத்துவர் ராமலிங்கம், மருத்துவர் ஆர். நரேந்திரன் ஆகியோருடன் சேர்ந்து வழக்கில் சம்பந்தப்பட்ட ஷமீல் பாஷா என்ற ஆண் பிரேதத்தை தலைமை காவலர் 257 திரு. அனுமந்தன் அடையாளம் காட்ட அன்று மாலை 05.45 மணிக்கு பிரேத கூராய்வு தொடங்கினோம்.

அச்சமயம் அவரது உடலின் அனைத்து பாகங்களிலும் பிரேத விரைப்புத்தன்மை காணப்பட்டது. அவருடைய விரல் நகங்கள் ஊதா நிறத்தில் காணப்பட்டது. அவருடைய இரண்டு கண்களும் சிவந்திருந்தது. அவரது உடலில் காணப்பட்ட வெளிப்பிற காயங்கள் பழுப்பு நிறத்தில் ஆறிய சிராய்ப்பு காயங்கள்,

காயம் 1. 2 x 1 செ.மீ. அளவில் வலது முழங்கையில் காணப்பட்டது.

காயம் 2. மேற்கண்ட 1 வது காயத்தின் 1 செ.மீ. அளவில் வெளிப்பக்கத்தில் 1 x 1 செ.மீ. அளவில் சிராய்ப்பு காயம்.

காயம் 3. 0.8 x 0.5 செ.மீ. அளவில் வலது கைமுட்டிக்கு வெளிப்பக்கத்தில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

காயம் 4. 7 x 0.5 to 4 செ.மீ. அளவில் வலது முழங்கையில் பின்புறத்தில் மையப்பகுதியில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

மேற்கண்ட 4 வது காயத்தை கூராய்வு செய்ததில் 2 x 2.5 x1 செ.மீ அளவில் கன்றிய காயம் காணப்பட்டது.

**கன்றிய காயங்கள்**

காயம்1. 2 x3 செ.மீ. அளவில் பழுப்பு நிறத்தில் வலது காலில் மைய முன் பகுதியில் ஒரு காயம் காணப்பட்டது. அதை கூராய்வு செய்ததில் 4 x 3 x 0.5 செ.மீ அளவில் சிவந்த கன்றிய காணம் காணப்பட்டது.

காயம்2. 3 x 2 செ.மீ அளவில் பழுப்பு நிறத்தில் வலது காலின் கீழ் பகுதியின் வெளிப்பிறத்தில் ஒரு காயம் காணப்பட்டது. அதை கூராய்வு செய்ததில் 5 x 5 x 0.5 செ.மீ. அளவில் கன்றிய காயம் காணப்பட்டது.

காயம் 3. 5 x 2 செ.மீ. அளவில் பழுப்பு நிறத்திலான ஒரு காயம் வலது கணுக்கால் முட்டிக்கு முன் பகுதியில் காணப்பட்டது. அதை கூராய்வு செய்ததில் 9 x 9 x 0.5 செ.மீ. அளவில் இரத்தம் கன்றிய வலது

கணுக்காலில் முட்டியில் முன் மற்றும் பக்கவாட்டில் காணப்பட்டது. காயம் 4. 2 x 1 செ.மீ. அளவில் வலது காலின் உட்பகுதியில் ஒரு காயம் காணப்பட்டது. அதை கூராய்வு செய்ததில் 2 x 1.5 x 0.5 செ.மீ அளவில் இரத்தம் கன்றி காணப்பட்டது.

அவரது வலது பக்க மார்பில் 5 மற்றும் 6 மார்பக எலும்புக்கு இடையில் அறுவை சிகிச்சை செய்ததற்கான சிறிய கீறல் காணப்பட்டது. அவருடைய உடம்பின் அனைத்து பாகங்களிலும் நீல வாக்கில் கூராய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் ஒன்று 4 x 3 x 0.5 செ.மீ. அளவில் இரண்டு உள்ளங்கைகளில் மைய பகுதியில் இரத்தம் கன்னி காணப்பட்டது. இடது முதுகு எலும்பு மேற்பகுதியில் 8 x 4 x 0.5 செ.மீ. அளிவல் இரத்தம் உரைந்து காணப்பட்டது.

மேலும் கூராய்வு செய்ததில் வலது நுரையீரலின் 75 மி.லி. வெளிரிய மஞ்சள் திரவம் மற்றும் இடது நுரையீரலை சுற்றி 175 மி.லி அளவில் வெளிரிய மஞ்சள் திரவம் காணப்பட்டது. இரண்டு நுரையிரல்களின் மேற்பகுதியில் நுண்ணிய இரத்த கசிவுகள் காணப்பட்டது. அவரது இரைப்பையின் 75 மி.லி. அளவில் வெளிரிய மஞ்சள் நிற திரவம் எவ்வித வாசனையும் இன்றி காணப்பட்டது.

இரைப்பையின் உள்பக்க கூறுகள் கன்றி காணப்பட்டது. அவரது சிறுகுடலில் 3 x 2 x 0.2 செ.மீ. அளவில் இரத்தம் கன்றிக்காணப்பட்டது. அவரது கல்லீரலில் மேற்பகுதியில் பல்வேறு வடிவம் மற்றும் அளவுகள் கன்றியும் காணப்பட்டது. வலது சிறுநீரகத்தின் கிழ் பகுதியில் இரத்தம் கன்றி காணப்பட்டது. மற்ற உள்ளுறுப்புகள் சாதாரண நிலை மற்றம் கன்றிய நிலையில் இருந்தது.

அவரது உள்ளுறுப்புகள் சேகரிப்பட்டு இராசாயன பரிசோதனைக்கு அனுப்ப்பட்டு அதில் எவ்விதமான நச்சு பொருட்களோ சாராயமோ கண்டறியப்படவில்லை. அந்த தடய அறிவியல் அறிக்கை அ.த.சா.ஆ.58 ஆகும். அவரது மூளை, நுரையீரல், இருதயம், மண்ணீரல், கல்லீரல், சிறுநீரகம் ஆகய பகுதியிலிருந்து தசைகள் எடுக்கப்பட்டு நுண்ணுயிரியல் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன. அதில் மூளை வீங்கி மற்றும் கன்றி காணப்பட்டது. நுரையீரல் பகுதி வீங்கியும் மற்றும் கன்றியும் காணப்பட்டன. இதயம் கன்றிய நிலையில் இருந்தன.

கல்லீரலில் சிரோசிஸ் காணப்பட்டது. தொடர்ந்து மது அருந்துபவர்களுக்கு கொழுப்பு படிவம் ஏற்படுவதை சிரோசிஸ் ஏற்படும். சிறுநீரகம் அதில் உள்ள குழாய்கள் அழுகிய நிலையில் இருந்ததாக காணப்பட்டது. மண்ணிரலில் இரத்தக்கசிவு இருந்ததாக குறிப்பிடப்பட்டடிருந்தது.

சிறுகுடல் மற்றம் பெருங்குடல் அழுகிய நிலையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி நுண்ணுயிரியல் பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.59. அது எங்கள் மருத்துவமனையில் உள்ள பேத்தாலஜி துறையில் தரப்பட்ட அறிக்கையாகும். அந்த அறிக்கையை பொருத்து குறியீடுவதற்கு எதிரிகள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது. காரணம் அந்த அறிக்கையை வேறொரு மருத்துவர் வழக்கினார் என்றும் அதைபொறுத்து இறுதி வாதுரையில் வாதுரைக்கலாம் என்ற நிலையில் அது குறியீடு செய்யப்படுகிறது.

அந்த அறிக்கைகளை பெற்று எங்களது குழுவில் இருந்த 3 மருத்துவர்களும் ஒன்று சேர்ந்து மேற்கண்ட நபருக்கு ஏற்பட்ட பலதரப்பட்ட ஊமைக்காயங்களின் விளைவாக இறந்திருக்ககூடும் என்று சான்று அளித்தோம். நாங்கள் வழங்கிய பிரேத கூராய்வு அறிக்கை அ.த.சா.ஆ.60. எங்களது இறுதி கருத்துரை அ.த.சா.ஆ.61.

மேற்கண்ட வழக்கு தொடர்பாக வேலூர சரக காவல் துறை கண்காணிப்பாளர் சில கேள்விகளை கேட்டு அதற்கான கருத்தை கேட்டு அனுப்பினார் அதற்கு எங்களது குழுமம் பதில் அனுப்பினோம். நாங்கள் அனுப்பிய பதில் கேள்வியுடன் சேர்ந்து அ.த.சா.ஆ.62. அதில் காயங்களின் வயதை பற்றியும் அந்த காயங்கள் எந்த ஆயுதத்தால் ஏற்பட்டது என்றும் கேட்டார்கள் அதற்கு அந்த காயங்கள் இறப்பதற்கு முன் 7 முதல் 10 நாட்களில் ஏற்பட்டிருக்கலாம் என்றும் அந்த காயங்கள் மழுங்கிய ஆயுதத்தால் ஏற்பட்டது என்றும் நாங்கள் பதில் அளித்தோம்.

இந்த வழக்கிற்காக நாங்கள் மூவரும் 29.08.2016 அன்று வேலூர் நீதித்துறை நடுவர்.5 முன்பு வாக்குமூலம் கொடுத்தோம். நான் தனியாக வாக்குமூலம் கொடுத்தேன் அதில் நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். மேற்படி காயங்கள் ஏற்படாமல் இருந்தால் மேற்படி ஷமீல்பாஷா இறக்காமல் இருந்திருக்க வாய்புள்ளதா என்று கேட்டதற்கு நாங்கள் இல்லை என்று பதிலளித்தோம். வேலூர் டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

(இடைவேளை நேரம் மாலை 04.40 மணி)

குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் மாலை 04.47 மணி

**1 ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் துறையால் கொடுக்கப்பட்ட கேள்விகள் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. அந்த கேள்விகளுக்கு தேவைப்பட்ட பதிலை நாங்கள் மூவரம் சேரந்து ஆலோசித்து அடித்து காவல் துறையில் கொடுத்தோம். அ.த.சா.ஆ.58 முல் 61 போலீசாரிடம் யார் ஒப்படைத்தார்கள் என்றால் நாங்கள் குற்றவியல் நீதித்துறை நடுவர்முன்பு வாக்குமூலம் கொடுக்க வரும்போது சமர்ப்பித்தோம். அதை நாங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததற்கான சான்றாவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

Q: Is there any details available in Exh.P.58 to 61 to whom it was forwarded?

A: No details available.

Q: Whether the photos available in Ex.P.60 was enclosed by me?

A: No photos enclosed by me. Usually we never enclose photos.

Q: Whether any receipt or bill or who took the photo or available in Exh.P.60?

A: No details available.

Q: What is Patient Name?

A: Shameel Basha as per the document submitted to me.

Q: Whether any patient in the Medico Legal Cases comes for admission or treatment is it mandatory to prepare an Accident Register?

A: Yes. If the Patient is referred from one hospital to another hospital no need to register AR in the later hospital if the AR copy of the former hospital is attached in the referral order.

Q: If any extra injuries happen during transit period who will be responsible?

A: The persons who are accompanied along with the patient in the ambulance.

Q: In whose custody mortuary is there?

A: Residential Medical Officer is the incharge of mortuary.

Q: Kindly tell whether the Doctor who admitted the patient record the AR have to completely examine the patient?

A: Yes. It is the duty of the medical officer.

Q: In the Exh.P.61 is there any correction of date?

A: Yes. Date corrected.

Q: Whether the MLC case documents should be kept in the hospital in safe custody till the criminal case is disposed off?

A: There is a GO to destruct more than 6 years documents in the hospital.

Q: Whether that GO is applicable to MLC cases?

A: I don't have any idea. Only the Residential Medical Officer can know.

Q: Even if any GO is there that it would not applicable to MLC cases?

A: The final decision would be taken by Residential Medical Officer.

Q: When the documents related to the treatment related to the MLC cases not preserved that will be taken as an offence?

A: I don't know.

Q: Do you agree while doing postmortem of the dead body of Shameel Basha you have stated in the column of contusion reddish brown and dark red contusion on dissection?

A: Yes.

Q: Do you agree in Exh.P.60 in column 1(d) you have stated a dark red colored contusion?

A: Yes. On dissection it is known.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

உடல்கூராய்வு செய்வதற்கு எங்களுக்கு யார் உத்தரவு வழங்கியது என்றால் எங்களுடைய மருத்துவ கல்லூரி டீன் 3 நபர்களை நியமித்து உத்தரவு வழங்கினார். 27.06.2015 அன்று உடல் கூராய்வு செய்யப்பட்டது. எந்த சிபிசிஐடி போலீசார் விசாரித்தார் என்றால் என்னை டிஎஸ்பி விசாரித்தார்.

என்னை கு.வி.மு.ச. பிரிவு 161—ன் கீழ் போலீசார் விசாரித்தபோது 27.05.2015 அன்று உடல்கூராய்வு செய்ததாக உள்ளது என்றால் தேதி தவறாக தட்டச்சு செய்யப்பட்டிருக்கலாம். நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உடல்கூராய்வு செய்யும்போது இணை பேராசிரியராக இருந்தேன்.

என்னுடைய போலீசார் வாக்குமூலத்தில் உதவி பேராசிரியர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை. போலீசார் வாக்குமூலத்தில் என்னுடைய பதவியை தவறாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

தட்டச்சு செய்யும்போது தவறாக செய்திருக்கலாம். இணைப்பேராசிரியரின் பணி மாணவர்களுக்கு பாடம் எடுப்பது, ஆராய்ச்சி செய்வது, பிணக்கூராய்வு செய்வது, வயது நிர்ணயம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் விசாரணை அறிக்கை கொடுப்பது. உடல்கூராய்வு செய்வதற்கான வேண்டுகோளில் முதல் தகவல் அறிக்கையை மற்றும் போலீசார் செய்த பிரேத விசாரணை அறிக்கையுடன் எங்கள் கல்லூரி முதல்வர் உத்தரவு வழங்கினார்.

சிபிசிஐடி போலீசார் என்று என்னை விசாரித்தார் என்ற தேதி எனக்கு நினைவில்லை. வழக்கின் குற்ற எண்னை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். சிபிசிஐடி போலீசார் என்னை விசாரிக்கும்போது வழக்கின் முதல் தகவல் அறிக்கை மற்றும் பிணக்கூராய்வு வேண்டுகோள் கடிதத்தின் உள்ள குற்ற எண்னை குறிப்பிட்டேன். சாதாரணமாக கையில் ஏற்பட்ட சிறிய கன்றிய காயங்கள் மற்றும் சிராய்ப்பினால் இறப்பு ஏற்பட வாய்ப்பில்லை.

மூவர் குழுவில் நான்தான் முதன்மையாக இருந்து பிணக்கூராய்வு செய்தேன். பிணக்கூராய்வு செய்யும்போது என்னுடன் இருக்கும் உதவியாளர்கள் நான் கொடுக்கின்ற குறிப்புகளை எழுதிக்கொள்வார்கள் பின்னர் நான் அதை பார்த்து பிணக்கூராய்வு அறிக்கை தயாரித்து இறுதி கருத்துரை அளிப்போம். போலீஸ் விசாரணையில் நான் அவ்வாறு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

வழக்கிற்கான குற்ற எண்ணிற்குரிய நபரின் சடலத்தை நான் பிணக்கூராய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு முழுவம் தெரிந்திருந்தால் நான் டிஎஸ்பியிடன் சொல்லியிருப்பேன் என்றாலும்,

நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நீதிமன்றத்தில் முன்னுக்குபின் முரணாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 06.24 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.17 19:24:14 +0530